# 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 4/1997)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Clinical Establishments (Regulation) Act, 1997

## (Tamil Nadu Act No. 4 of 1997)

(as on 31st October 2023)

**தமிழாக்கம் :**

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

**சென்னை**

தமிழ்நாடு அரசுக்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

2023

# 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 4/1997)

பிரிவு பொருளடக்கம்


1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்.

2. பொருள் வரையறைகள்.

2–A. மாநில அளவிலான ஆலோசனைக் குழுவை அமைத்தல்.

2–B. மாநில அளவிலான ஆலோசனைக் குழுவின் கூட்டங்கள்.

2–C. மாநில அளவிலான ஆலோசனைக் குழுவின் பணிகள்.

2–D. மாவட்டக் குழுவை அமைத்துருவாக்குதல்.

2–E. மாவட்டக் குழுவின் கூட்டங்கள்.

2–F. மாவட்டக் குழுவின் பணிகள்.

3. மருத்துவ நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

4. பதிவுச் சான்றிதழ்.

5. பதிவைத் தற்காலிக நீக்கம் செய்தல் அல்லது இரத்து செய்தல்.

5 –A. மருத்துவ நிறுவனங்கள் வசதிகள் மற்றும் சேவைகளைப் பேணுதல்.

5–B. மருத்துவ நிறுவனங்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள்.

5–C. ஆண்டுதோறும் மருத்துவ நிறுவனங்களின் பட்டியலை வெளியிடுதல்.

6. ஆய்வு அல்லது விசாரணை.
7. மேல்முறையீடுகள்.
8. பணத்தண்டம்.
9. நிறுமங்களால் செய்யப்படும் குற்றச்செயல்கள்.
10. குற்றச்செயலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.
11. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.
12. விவர உரை முதலியவற்றை அளித்தல்.
13. தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு முதலானோர் பொது ஊழியர்கள் ஆவர்.
14. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.
15. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

# 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு [1][****] மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டம்

(தமிழ்நாடு சட்ட எண் 4/1997)

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 1997ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத்தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.]

இந்தியக் குடியரசின் நாற்பத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு:–

1. **குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்.**– [2][(1) இந்தச் சட்டம், 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டம் என வழங்கப்படும்.]

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

[2][(3) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.]

2. **பொருள்வரையறைகள்.**– இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,–

[3][(a) "மருத்துவ நிறுவனம்" என்பது ஏதேனும் ஒப்புதல் அளிக்கப்பட்ட மருத்துவ முறையின்படியான ஒரு மருத்துவ நிறுவனம் எனப் பொருள்படும் மற்றும்,–

---

1. 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தின் (சட்ட எண் 19/2018) பிரிவு 2ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

2. 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தின் (சட்ட எண் 19/2018) பிரிவு 3ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

3. 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தின் (சட்ட எண் 19/2018) பிரிவு 5ஆல் புகுத்தப்பட்டது.

(i) பல் மருத்துவமனை, மகப்பேறு மருத்துவமனை, மருந்தகம், மருத்துவ ஆலோசனை அறை, மருத்துவமனை, பல்வகை நோய்க்கான மருத்துவமனை அல்லது நலவாழ்வு மையம் உள்ளிட்ட ஒரு பொது மருத்துவமனையை;

(ii) எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும் அங்கு உள்நோயாளியாகவோ அல்லது வெளி நோயாளியாகவோ அறுவை சிகிச்சை நடைமுறைகளுடனோ அல்லது இல்லாமலோ உடல் நோயால் அல்லது மனநோயால் பாதிக்கப்பட்டுள்ள, காயமடைந்துள்ள அல்லது உடல் பலகீனமான நிலையில் சிகிச்சைக்காக ஒரு நபர் அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு நிலையம் அல்லது மையத்தை;

(iii) ஆய்வக அல்லது பிற மருத்துவக் கருவிகளின் உதவியுடன் கதிரியக்க, உயிரியியல் அல்லது பிறநோய் கண்டறியும் அல்லது ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும் மருத்துவமனையை கூட்டுருமமாகப் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் இல்லை என்றாலும், எந்தவொரு நபர் அல்லது நபர்களின் குழுமத்தால் அல்லது மாநில அரசால் அல்லது மைய அரசால் அல்லது மாநில அரசு அல்லது மைய அரசின் துறையால் அல்லது பொது அல்லது தனியார் பொறுப்புக்கட்டளையால் அல்லது ஓர் உள்ளாட்சி அதிகார அமைப்பால் அல்லது அரசிற்கு சொந்தமாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் ஒரு

நிறுமத்தால் நிறுவப்பட்டு நிருவகிக்கப்படும் அல்லது பராமரிக்கப்பட்டு வருபவற்றை உள்ளடக்கும், ஆனால் ஆயுதப்படையினரின் கட்டுப்பாட்டில் அல்லது மேலாண்மையில் உள்ள மருத்துவ நிறுவனங்களை உள்ளடக்காது.

**விளக்கம்.–** இந்தக் கூறுகளின் நோக்கத்திற்காக "ஆயுதப் படைகள்" என்பது 1950ஆம் ஆண்டு ஆயுதப்படைச் சட்டம், (மையச்சட்டம் 46/1950) 1950ஆம் ஆண்டு வானூர்திப் படைச் சட்டம் (மையச்சட்டம் 45/1950) மற்றும் 1957ஆம் ஆண்டு கடற்படைச் சட்டம் (மையச்சட்டம் 62/1957) ஆகியவற்றின்படி அமைத்துருவாக்கப்பட்ட படைகள் எனப் பொருள்படும்;]

[1][(aa)] "தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு" என்பது, இந்தச் சட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த அதிகாரஅமைப்பின் அலுவற்பணிகளை ஆற்றுவதற்காக அறிவிக்கையின் மூலம் அரசினால் நியமிக்கப்படும் ஏதேனும் அதிகாரஅமைப்பு, அலுவலர் அல்லது நபர் என்று பொருள்படுவதோடு வெவ்வேறு பரப்பிடங்களுக்கு வெவ்வேறு தகுதி வாய்ந்த அதிகாரஅமைப்பு நியமிக்கப்படலாம்;

[2][(aaa) " மாவட்டக் குழு" என்பது பிரிவு 2–D இன்படி அமைத்துருவாக்கப்பட்டக் குழு எனப் பொருள்படும்;]

1. 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தின் (சட்ட எண் 19/2018) பிரிவு 5ஆல் மறு எழுத்திடப்பட்டது.

2. 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தின் (சட்ட எண் 19/2018) பிரிவு 5ஆல் புகுத்தப்பட்டது

(b) "அரசு" என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்;

[1][(c) "ஒப்புதல் அளிக்கப்பட்ட மருத்துவமுறை" என்பது ஆங்கில மருத்துவம், யோகா, இயற்கை மருத்துவம், ஆயுர்வேதா, ஹோமியோபதி, சித்த மருத்துவம் அல்லது யுனானி மருத்துவ முறை அல்லது மைய அரசால் அல்லது மாநில அரசால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட பிற மருத்துவ முறை எதுவும் எனப் பொருள்படும்;

(d) "மாநில அளவிலான ஆலோசனைக்குழு" என்பது, பிரிவு 2–Aஇன்படி அமைக்கப்பட்ட குழு எனப் பொருள்படும்.]

[2][2–A. **மாநில அளவிலான ஆலோசனைக் குழுவை அமைத்தல்.–** (1) மாநில அரசு, மாநில அளவிலான ஆலோசனைக்குழு என்று அழைக்கப்படும் குழு ஒன்றை அறிவிக்கை வாயிலாக அமைத்தல் வேண்டும்.

(2) மாநில அளவிலான ஆலோசனைக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அதாவது:–

(a) மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் பதவிவழித் தலைவராக இருப்பார்;

(b) மருத்துவக் கல்வி இயக்குநர், பதவிவழியில் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர்;

(c) இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆணையர் பதவிவழியில் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர்;

---

1. 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தின் (சட்ட எண் 19/2018) 5ஆம் பிரிவினால் புகுத்தப்பட்டது.

2. 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தின் (சட்ட எண் 19/2018) பிரிவு 6ஆல் புகுத்தப்பட்டது

(d) பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் பதவிவழியில் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர்;

(e) ஆயர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்த மருத்துவம் மற்றும் ஹோமியோபதி என்ற வரிசையில், தொடர்புடைய மாநில மருத்துவ மன்றத்தால் பெயர் குறித்து அமர்த்தப்பட்ட ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்த மருத்துவம் மற்றும் ஹோமியோபதி மருத்துவ முறைகளிலிருந்து ஓராண்டிற்கு சுழற்சி அடிப்படையில் உறுப்பினர் ஒருவர்;

(f) இந்திய மருத்துவ சங்கத்தின் மூலம் நியமிக்கப்பட்ட உறுப்பினர்;

(g) தமிழ்நாடு மருத்துவ மன்றத்தின் மூலம் நியமிக்கப்பட்ட உறுப்பினர்;

(h) தமிழ்நாடு பல் மருத்துவ மன்றத்தின் மூலம் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்; மற்றும்

(i) தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் குழுமத்தின் மூலம் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் மூன்றாண்டு காலஅளவிற்கு பதவி வகித்தல் வேண்டும், ஆனால் மேலும் மூன்றாண்டு காலஅளவிற்கு மறுநியமனத்திற்கு தகுதியுடையவர் ஆவர்.

**2-B. மாநில அளவிலான ஆலோசனைக் குழுவின் கூட்டங்கள்:-** (1) மாநில அளவிலான ஆலோசனைக் குழு, வகுத்துரைக்கப்படும் காலம் மற்றும் இடத்தில் குறைந்தது ஆண்டுக்கு ஒரு முறை கூடுதல் வேண்டும்.

(2)தலைவர் அல்லது அவர் வருகை தராத நிலையில், வருகை தந்துள்ள உறுப்பினர்களால்

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் எவரும் கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல் வேண்டும்.

(3) கூட்டம் நடத்தத் தேவைப்படும் குறைவெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் அந்தக் கூட்டத்தில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை வகுத்துரைக்கப்படும் முறையில் இருத்தல் வேண்டும்.

**2–C. மாநில அளவிலான ஆலோசனைக் குழுவின் பணிகள்:–** மாநில அளவிலான ஆலோசனைக் குழு மருத்துவ நிறுவனங்களை முறைப்படுத்துதல் தொடர்பான விவரங்களின் பேரில் அரசுக்கு அறிவுரை வழங்குதல் வேண்டும் மற்றும் அவ்வப்போது அரசால் அதற்கு குறிப்பிடப்படும் பிற பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

**2–D. மாவட்டக் குழுவை அமைத்துருவாக்குதல்:–** (1) அரசானது, ஒவ்வொரு மாவட்டத்திற்காகவும் மாவட்டக்குழு என அழைக்கப்படுகின்ற ஒரு குழுவினை அறிவிக்கையின் மூலம் அமைத்தல் வேண்டும்.

(2) மாவட்டக் குழுவானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும், அதாவது:–

(a) மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகளின் துணை இயக்குநர் பதவிவழித் தலைவராக இருப்பார்;

[1][(aa) மாவட்டப் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருத்துவத் துறையின் துணை இயக்குநர்;]

(b) மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரியின் புல முதல்வர் (Dean);

(c) மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர் ஒருவர்;

---

1. 2021ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தின் (சட்ட எண் 16/2021) பிரிவு 2ஆல் புகுத்தப்பட்டது.

(d) தமிழ்நாடு மருத்துவ மன்றத்தால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

(e) இந்திய மருத்துவச் சங்கத்தால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

(f) ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்தமருத்துவம் மற்றும் ஹோமியோபதி என்ற வரிசையில் தொடர்புடைய மாநில மருத்துவ மன்றத்தால் பெயர் குறித்து அமர்த்தப்பட்ட ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்த மருத்துவம் மற்றும் ஹோமியோபதி மருத்துவ முறைகளிலிருந்து ஓராண்டிற்கு சுழற்சி அடிப்படையில் உறுப்பினர் ஒருவர்; மற்றும்

(g)தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் குழுமத்தால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்.

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் மூன்று ஆண்டு காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும் ஆனால் மீண்டும் மூன்று ஆண்டு காலத்திற்கு மறு நியமனத்திற்கு தகுதி உடையவர் ஆவர்.

**2–E. மாவட்டக் குழுவின் கூட்டங்கள்:–** (1) மாவட்டக் குழுவானது குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒரு முறையாவது வகுத்துரைக்கப்படும் நேரத்திலும், இடத்திலும் கூடுதல் வேண்டும்.

(2) தலைவர் அல்லது அவர் வருகை தராத நிலையில் வருகை தந்துள்ள உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் எவரும் கூட்டத்திற்குத் தலைமைத் தாங்குதல் வேண்டும்.

(3) கூட்டம் நடத்தத் தேவைப்படும் குறைவெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் அந்தக் கூட்டத்தில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை வகுத்துரைக்கப்படும் முறையில் இருத்தல் வேண்டும்.

**2–F. மாவட்டக் குழுவின் பணிகள்:–** மாவட்டக் குழுவானது மருத்துவ நிறுவனங்களைப் பதிவு செய்தலும் விவரங்களின் பேரில் தகுதி வாய்ந்த மாவட்ட அதிகார

அமைப்பிற்கு உதவி செய்தலும், ஆலோசனை வழங்குதலும் வேண்டும் மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதைச் சார்ந்த வகுத்துரைக்கப்படும் பிற கடமைகளையும் ஆற்றுதல் வேண்டும்.]

[1][**3. மருத்துவ நிறுவனங்களைப் பதிவு செய்தல்.–** (1) இந்தச் சட்டத்தின்படி மருத்துவ நிறுவனங்களை உரியவாறு பதிவு செய்தாலன்றி நபர் எவரும் மருத்துவ நிறுவனங்கள் எதையும் நடத்துதல் கூடாது:

**வரம்புரை:–** 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மருத்துவ நிறுவனங்கள் திருத்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று (அறிவிக்கை செய்யப்பட்ட தேதி என்று குறிப்பிடப்பட்டு) இருக்கின்ற மருத்துவ நிறுவனம் ஒவ்வொன்றும் அறிவிக்கை செய்யப்பட்ட தேதியிலிருந்து [2][பதினைந்து மாதங்களுக்குள்] பதிவிற்காக விண்ணப்பித்தல் வேண்டும் மற்றும் அறிவிக்கை செய்யப்பட்ட தேதிக்குப் பின்பு நிறுவப்பட்டுள்ள மருத்துவ நிறுவனமானது அதனுடைய தொடக்கத் தேதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் பதிவிற்காக விண்ணப்பித்தல் வேண்டும்;

**மேலும் வரம்புரை:** அறிவிக்கை செய்யப்பட்ட தேதியன்று உள்ள மருத்துவ நிறுவனம் ஒவ்வொன்றும், பதிவுக்காக விண்ணப்பித்திருந்து மற்றும் பதிவு செய்திருந்தாலன்றி அல்லது அத்தகைய விண்ணப்பத்தை முடிவு செய்யும் வரையில், இதில் எது முந்தியதோ அதுவரை, அறிவிக்கை செய்துள்ள தேதியிலிருந்து [2][பதினெட்டு மாதங்கள்] முடிவடைந்ததன் பேரில் அதனுடைய மருத்துவ தொழிலை நிறுத்தி வைத்தல் வேண்டும்]

---

1. 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தின் (சட்ட எண் 19/2018) பிரிவு 7ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

2. 2019ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தின் (சட்ட எண் 33/2019) பிரிவு 2ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

(2) உட்பிரிவு (1) இன்படி பதிவு செய்வதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் தகுதி வாய்ந்த அதிகார அமைப்பிற்கு வகுத்துரைக்கப்படும் படிவத்திலும் முறையிலும் ரூபாய் ஐந்தாயிரத்திற்கு மிகாத கட்டணத்தை இணைத்தும் செய்யப்படுதல் வேண்டும்.

[1][**வரம்புரை:** மாநில அரசு அல்லது மத்திய அரசால் அல்லது மாநில அரசு அல்லது மத்திய அரசின் துறைகளால் அல்லது மாநில அரசு அல்லது மத்திய அரசுக்கு அல்லது ஓர் உள்ளாட்சி அதிகாரஅமைப்பிற்குச் சொந்தமான அல்லது அவற்றின் கட்டுப்பாட்டிலுள்ள நிறுமம் எதனாலும் நிறுவப்படும் மற்றும் நிருவகிக்கப்படும் அல்லது பேணிவரப்படும் மருத்துவ நிறுவனங்களிடமிருந்து கட்டணம் எதுவும் தண்டல் (வசூல்) செய்யப்படக் கூடாது.]

(3) ஒரு மருத்துவ நிறுவனம் வகுத்துரைக்கப்படும் திறம் வாய்ந்த மனிதவளம் மற்றும் தளவாடங்கள் சூழல்கள் மற்றும் சிறப்பான சேவைகளையும் வசதிகளையும் வழங்கத்தக்க நிலையிலுள்ளது எனத் தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு மனநிறைவடைந்தாலன்றி இந்தச் சட்டத்தின்படி அத்தகைய மருத்துவ நிறுவனம் எதுவும் பதிவு செய்யப்படுதல் கூடாது.

**4. பதிவுச் சான்றிதழ்.–** (1) தகுதி வாய்ந்த அதிகாரஅமைப்பானது விசாரணையை மேற்கொண்ட பின்பும், இந்தச் சட்டத்தின் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதிகள் அனைத்திற்கும் விண்ணப்பதாரர் இணங்கி நடந்திருக்கிறார் என்று, தாம் மனநிறைவடைந்த பின்பு வகுத்துரைக்கப்படும் வடிவத்திலும், நிபந்தனைகளுக்கு உட்பட்டும், அந்த மருத்துவ நிறுவனத்திற்குப் பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

---

1. 2019ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தின் (சட்ட எண் 33/2019) பிரிவு 2ஆல் சேர்க்கப்பட்டது

(2) அதை விசாரணை செய்த பின்னரும் அந்த விண்ணப்பதாரருக்குக் கேட்கப்படுவதற்கான ஒரு வாய்ப்பினை நல்கிய பின்னரும் அந்தத் தகுதி வாய்ந்த அதிகாரஅமைப்பானது, இந்தச் சட்டத்தின்படி மற்றும் இதன் கீழ் செய்யப்பட்ட விதிகளுக்கு இந்த விண்ணப்பதாரர் இணங்கி நடக்கவில்லை என்று மனநிறைவடைந்தால், அது எழுத்துவடிவிலான காரணங்களைப் பதிவு செய்துவிட்டு, பதிவு செய்தலுக்கான விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்யலாம்.

(3) ஒவ்வொரு பதிவுச் சான்றிதழும் ஐந்தாண்டுக் காலஅளவிற்கு செல்லத்தக்கதாகும் மற்றும் ஒரே நேரத்தில் ஐந்தாண்டுக் காலஅளவிற்கு புதுப்பிக்கப்படக் கூடியதாகும்.

(4) பதிவினைப் புதுப்பித்தலுக்கான ஒவ்வொரு விண்ணப்பமும், வகுத்துரைக்கப்படும் கால அளவிற்குள் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளானவை பதிவு செய்தல் குறித்து எந்த அளவிற்குப் பொருந்துமோ அந்த அளவிற்குப் பதிவு செய்தலைப் புதுப்பித்தல் குறித்தும் பொருந்தும்.

(5) பதிவுச் சான்றிதழ் ஒன்று இழக்கப்பட்டிருந்தால், அழிக்கப்பட்டிருந்தால், உருச்சிதைக்கப்பட்டிருந்தால் அல்லது சேதப்படுத்தப்பட்டிருந்தால் விண்ணப்பத்தின் பேரிலும் அத்தகைய வகுத்துரைக்கப்படும் கட்டணத்தை செலுத்துவதின் பேரிலும் சான்றிதழின் மாற்றுப் படியினை (Duplicate) வழங்கலாம்.

**5. பதிவைத் தற்காலிக நீக்கம் செய்தல் அல்லது இரத்து செய்தல்.–** [1][(1) மருத்துவ நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழை வைத்திருப்பவர் மொத்தத்தில் மூன்று முறை இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதன் படியும் தண்டிக்கப்பட்டிருக்கிற நிலையில் தகுதி வாய்ந்த அதிகார அமைப்பானது, பதிவுச் சான்றிதழை இரத்து செய்தல் வேண்டும் மற்றும் மருத்துவ நிறுவனத்தைப் புதிதாகப் பதிவு செய்வதற்காக விண்ணப்பிப்பதற்கு அனுமதித்தல் கூடாது.]

[2][(1–A)] தகுதி வாய்ந்த அதிகாரஅமைப்பானது, தானே முன்வந்து அல்லது முறையீட்டின் பேரில், மருத்துவ நிறுவனம் எதையும், இந்தச் சட்டத்தின் கீழ் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட காரணங்களுக்காக அதன் பதிவு ஏன் தற்காலிக நீக்கம் செய்யப்படக்கூடாது அல்லது இரத்து செய்யப்படக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு அறிவிப்பு ஒன்றைக் கொடுக்கலாம்.]

(2) மருத்துவ நிறுவனத்திற்கு கேட்கப்படுவதற்கு நியாயமான வாய்ப்பு ஒன்றினை நல்கிய பின்பு, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளில் எதையும், அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளில் எதையும், அல்லது பதிவு செய்த நிபந்தனைகளில் எதனையும், மீறியுள்ளதாகத் தகுதி வாய்ந்த அதிகாரஅமைப்பு மனநிறைவடைந்தால், அது, அத்தகைய மருத்துவ நிறுவனத்திற்கு எதிரான வேறு ஏதேனும் நடவடிக்கைக்கு ஊறின்றி அது பொருத்தமெனக் கருதும் காலஅளவிற்கு அதன் பதிவினைத் தற்காலிக நீக்கம் செய்யலாம் அல்லது அதன் பதிவினை இரத்து செய்யலாம்:

---

1. 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தின் (சட்ட எண் 19/2018) பிரிவு 8ஆல் புகுத்தப்பட்டது.

2. 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தின் (சட்ட எண் 19/2018) பிரிவு 8ஆல் மறு எண்ணிடப்பட்டது.

**வரம்புரை :** அவ்வாறு செய்வது பொது நலனுக்கு அவசியம் அல்லது உகந்தது என்று தகுதி வாய்ந்த அதிகாரஅமைப்பு கருதும்போது, அது எழுத்துவடிவில் பதிவு செய்யத்தக்க காரணங்களுக்காக, அறிவிப்பு எதுவும் இல்லாமல் மருத்துவ நிறுவனம் எதனின் பதிவினையும் தற்காலிக நீக்கம் செய்யலாம்.

[1][**5.A. மருத்துவ நிறுவனங்கள் வசதிகள் மற்றும் சேவைகளைப் பேணுதல்.–** (1) மருத்துவ நிறுவனம் ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படும் குறைந்த அளவு தர நிலைகளிலாவது வசதிகள் மற்றும் சேவைகளைப் பேணி வருதல் வேண்டும்.

(2) அரசானது, அங்கீகாரம் பெறப்பட்ட அனைத்து மருத்துவ முறைகளின்படி பல்வேறு வகையான மருத்துவ நிறுவனங்கள் வசதிகள் மற்றும் சேவைகளின் குறைந்த அளவு தரநிலையினை வகுத்துரைத்தல் வேண்டும்.

**5–B. மருத்துவ நிறுவனங்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள்.–** மருத்துவ நிறுவனம் ஒவ்வொன்றும் பின்வரும் கடமைகளையும் பொறுப்புகளையும் பின்பற்றுதல் வேண்டும், அதாவது:–

(a) பாதிக்கப்பட்ட நபர்கள் அவர்களே மருத்துவ நிறுவனங்களில் வருகை புரியும்போது சாலை விபத்துக்கள், விபத்து அல்லது உண்டாக்கப்பட்ட தீக்காயங்கள் அல்லது நஞ்சு அருந்துதல் அல்லது குற்றத் தாக்குதல் மற்றும் அதனைப் போன்ற அனைத்து சட்ட – மருத்துவ நிகழ்வுகளில் அல்லது சட்ட – மருத்துவ நிகழ்வுகளாக மாறக்கூடிய சாத்தியமுள்ள நிகழ்வுகளில் மருத்துவ முதல் உதவி அளித்தல் வேண்டும் மற்றும் பிற உயிர்காப்பு அல்லது நிலையான அவசர நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்;

---

1. 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தின் (சட்ட எண் 19/2018) 9ஆம் பிரிவினால் புகுத்தப்பட்டது.

(b) அவ்வப்போது அரசால் குறிப்பிடப்படும் முறையில் அனைத்து தேசிய மற்றும் மாநில சுகாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதில் பங்கு கொள்ளுதல் மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகார அமைப்புகளுக்கு காலமுறை அறிக்கைகளை அளித்தல்;

(c) அந்தந்த மருத்துவ முறைக்காக வகுத்துரைக்கப்படும் படிவத்திலும் முறையிலும் மருத்துவப் பதிவேடுகளைப் பராமரித்து வருதல்;

(d) தொற்றுநோய்கள் பரவாமல் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கையை எடுத்தல் மற்றும் அவ்வப்போது அரசு பணிக்கின்றபடி தொற்றா நோய்களை கட்டுப்படுத்தல் மற்றும்

(e) வகுத்துரைக்கப்படும் பிற கடமைகள் மற்றும் பொறுப்புகள்.

**5–C. ஆண்டுதோறும் மருத்துவ நிறுவனங்களின் பட்டியலை வெளியிடுதல்:–** தகுதி வாய்ந்த அதிகாரஅமைப்பானது வகுத்துரைக்கப்படும் படிவத்தில் மருத்துவ நிறுவனங்களின் பதிவேட்டைப் பராமரித்து வருதல் வேண்டும் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தின்போது, பதிவு செய்துள்ள மருத்துவ நிறுவனங்களின் பட்டியலை வகுத்துரைக்கப்படும் விதத்தில் அவைகளுக்குத் தொடர்புடைய விவரங்களுடன் சேர்த்து தமிழ்நாடு அரசிதழில் வெளியிடுதல் வேண்டும்.]

**6. ஆய்வு அல்லது விசாரணை.–** (1) தகுதி வாய்ந்த அதிகாரஅமைப்பு, அது பணிக்கக்கூடிய நபரால் அல்லது நபர்களால் மருத்துவ நிறுவனம் எதைப் பொறுத்தும், அதன் கட்டடங்கள், ஆய்வகங்கள், கருவிகள் மற்றும் மருத்துவ நிறுவனத்தால் நடத்தப்படும் அல்லது செய்யப்படும் பணியையும் கூட ஆய்வு செய்யப்படுமாறு

செய்வதற்கும், மருத்துவ நிறுவனத்தோடு தொடர்புடைய வேறு ஏதேனும் விவரத்தைப் பொறுத்தும் விசாரணை செய்யப்படுமாறு செய்வதற்கும் உரிமை உடையதாகும் மற்றும் அந்த நிறுவனம் அதில் பிரதிநிதித்துவம் செய்வதற்கும் உரிமை உடையதாகும்.

(2) தகுதி வாய்ந்த அதிகாரஅமைப்பானது, அந்த மருத்துவ நிறுவனத்தில் நடந்த அத்தகைய ஆய்வு அல்லது விசாரணையின் விளைவான கருத்துக்களை அந்த மருத்துவ நிறுவனத்திற்குத் தெரிவித்தல் வேண்டும். மற்றும், அவற்றின் மீதான மருத்துவ நிறுவனத்தின் கருத்துரையை உறுதி செய்த பின்பு அதன் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து அந்த நிறுவனத்திற்கு ஆலோசனை கூறுதல் வேண்டும்.

(3) ஆய்வு அல்லது விசாரணையின் விளைவாக, அந்த மருத்துவ நிறுவனம், எடுக்கக் கருதியுள்ள அல்லது எடுத்த நடவடிக்கை ஏதேனும் இருந்தால், அது குறித்து அந்தத் தகுதி வாய்ந்த நிறுவனத்திற்கு அறிக்கை செய்தல் வேண்டும். அத்தகைய அறிக்கை, தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு பணிக்கின்ற காலத்திற்குள் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(4) மருத்துவ நிறுவனமானது, தகுதி வாய்ந்த அதிகாரஅமைப்பு மனநிறைவடையும் வகையில், ஒரு நியாயமான காலத்திற்குள் நடவடிக்கை எடுக்காவிட்டால், அந்த அதிகாரஅமைப்பு, அந்த மருத்துவ நிறுவனத்தால் கொடுக்கப்பட்ட விளக்கத்தை அல்லது செய்யப்பட்ட பிரதிநிதித்துவத்தைப் பரிசீலனை செய்த பின்னர், அந்தத் தகுதி வாய்ந்த அதிகாரஅமைப்பு பொருத்தம் எனக் கருதும் பணிப்புரைகளை வழங்கலாம் மற்றும் மருத்துவ நிறுவனம் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

**7. மேல்முறையீடுகள்.**– பிரிவு 4 உட்பிரிவு (2) இன்படியான விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்த தகுதி வாய்ந்த அதிகாரஅமைப்பின் ஆணையால் அல்லது பிரிவு 5இன் உட்பிரிவு (2)இன்படி பதிவினை தற்காலிக நீக்கம் செய்த அல்லது இரத்து செய்த ஆணை ஒன்றால் அல்லது பிரிவு 6இன்படி தகுதி வாய்ந்த அதிகாரஅமைப்பின் பணிப்புரை எதனாலும் குறையுற்ற மருத்துவ நிறுவனம் எதுவும், அந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், வகுத்துரைக்கப்படும் தகுதி வாய்ந்த அதிகாரஅமைப்பிற்கு அத்தகைய முறையில் மேல்முறையீடு செய்தல் வேண்டும்.

[1][8. **பணத்தண்டம்.**– (1) பிரிவு 3இன் உட்பிரிவு (1)ஐ மீறுகின்ற நபர் எவரும் ஐந்தாயிரத்திற்குக் குறையாத ஆனால் ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படக்கூடிய பணத் தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவராவார்.

(2) இந்தச் சட்டத்தின் பிற வகைமுறை எதையும் அல்லது அதன்படி இயற்றப்பட்ட விதி எதையும் அல்லது பதிவிற்கான நிபந்தனை எதையும் மீறுகின்ற நபர் எவரும் ஐந்தாயிரத்துக்குக் குறையாத ஆனால் ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படக்கூடிய பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவராவார்.

**வரம்புரை**: இந்த உட்பிரிவின் மற்றும் உட்பிரிவு (1)இன் நோக்கத்திற்காக நீதிமன்றமானது, தீர்ப்புரையில் குறித்துரைக்கப்படும் போதிய அல்லது சிறப்புக் காரணங்கள் எதற்காகவும் ஐந்தாயிரம் ரூபாய்க்குக் குறைவான பணத்தண்டத்தை விதிக்கலாம்.

---

1. 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தின் (சட்ட எண் 19/2018) பிரிவு 10ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

(3) இந்தச் சட்டத்தின்படி அத்தகைய பணிப்புரைகளை பிறப்பிப்பதற்கு அதிகாரமுடைய நபர் அல்லது அதிகார அமைப்பு எதனாலும் சட்டப்படி வழங்கப்பட்டப் பணிப்புரை எதற்கும் வேண்டுமென்றே இசைய மறுக்கின்ற அல்லது இந்தச் சட்டத்தின்படி செயல்படுவதற்கு வேண்டப்பட்ட அல்லது அதிகாரம் கொண்டுள்ள அத்தகைய நபரை அல்லது அதிகார அமைப்பை பணி எதையும் ஆற்றுகையில் தடுக்கின்ற நபர் எவரும் முப்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படக்கூடிய பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவராவார்.

(4) இந்தச் சட்டத்தால் அல்லது இந்தச் சட்டத்தின்படி தகவல் எதையும் அளிப்பதற்கு வேண்டப்பட்ட, அத்தகைய தகவலை வேண்டுமென்றே தர மறுக்கின்ற, அல்லது தவறான தகவல் என்று தெரிந்திருந்தும், அல்லது அந்தத் தகவல் உண்மையானது என்று நம்பத் தகுந்தது அல்ல என்று தெரிந்தும், தகவல் அளிக்கின்ற நபர் எவரும் முப்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படக்கூடிய பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவராவார்.]

**9. நிறுமங்களால் செய்யப்படும் குற்றச்செயல்கள்.–**

(1) இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க செயல் எதுவும் ஒரு நிறுமத்தால் செய்யப்பட்டிருந்தால், அக்குற்றச்செயல் செய்யப்பட்ட காலத்தில் அந்நிறுமத்தின் அலுவலை நடத்தும் பொருட்டு, அந்நிறுமத்தைத் தம் பொறுப்பில் கொண்டிருந்தவரும், அதற்குப் பொறுப்பாயிருந்தவருமான ஒவ்வொரு நபரும் அதோடு அந்த நிறுமமும் கூட அக்குற்றச்செயலைச் செய்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதோடு மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்படியே தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்:

**வரம்புரை**: இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அத்தகைய நபர் எவரும், அக்குற்றச்செயலானது தமக்குத் தெரியாமலேயே செய்யப்பட்டிருக்கின்றது என்றோ, அல்லது அக்குற்றச்செயல் செய்யப்படுவதை தடுப்பதற்கான உரிய முயற்சி அனைத்தையும் தாம் மேற்கொண்டார் என்றோ, அவர் மெய்ப்பிப்பாரானால், அவரைத் தண்டனை எதற்கும் உள்ளாக்காது.

(2) உட்பிரிவு (1)இல் என்ன அடங்கியிருந்த போதிலும், இந்தச் சட்டத்தின்படி குற்றச்செயல் ஏதெனும் நிறுமம் ஒன்றால் செய்யப்பட்டிருந்து, அக்குற்றச் செயலானாது அந்நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரொருவரின் அனுமதியுடனோ மறைமுக ஆதரவுடனோ செய்யப்பட்டிருக்கின்றது அல்லது அவரது கவனக்குறைவு எதற்கும் சாட்டத்தக்கதாக இருக்கின்றது என மெய்ப்பிக்கப்படும்போது, அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் அக்குற்றச்செயலைச் செய்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதோடு, மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்படியே அவர் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்.

**விளக்கம்:** இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக,

(a) "நிறுமம்" என்பது ஏதேனும் கூட்டுருமக்குழுமம் எனப் பொருள்படும் மற்றும் ஒரு நிறுவகம், சங்கம் அல்லது பிற தனி நபர்களின் கழகத்தையும் உள்ளடக்கும்; மற்றும்

(b) "இயக்குநர்" என்பது –

(i) ஒரு நிறுவகம் தொடர்பாக, நிறுவகத்தில் உள்ள கூட்டாளி ஒருவர்;

(ii) சங்கம் அல்லது தனி நபர்களின் கழகம் தொடர்பாக, சங்கம் அல்லது பிற கழகத்தின் விதிகளின்படி நிகழ்விற்கேற்ப சங்கம் அல்லது பிற கழகத்தின் விவகாரங்களின் மேலாண்மை எந்த நபரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதோ அந்த நபர்

எனப் பொருள்படும்.

**10. குற்றச்செயலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.–** நீதிமன்றம் எதுவும், தகுதி வாய்ந்த அதிகார அமைப்பாலோ அல்லது இதன் பொருட்டு தகுதி வாய்ந்த அதிகாரஅமைப்பால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலராலோ செய்யப்பட்ட முறையீட்டின் பேரில் தவிர இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச் செயலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் கூடாது.

**11. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.–** (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்பேரில் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட செயல் எதற்காகவும், நபர் எவருக்கும் எதிராக உரிமைவழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் கூடாது.

(2) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின் பேரில் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட செயல் எதனாலும் விளைவிக்கப்பட்ட அல்லது பெரும்பாலும் விளைவிக்கப்படக்கூடிய சேதத்திற்காக அரசுக்கு எதிராக உரிமைவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் கூடாது.

**12. விவர உரை முதலியவற்றை அளித்தல்.–** ஒவ்வொரு மருத்துவ நிறுவனமும், இதன் பொருட்டு தகுதி வாய்ந்த அதிகார அமைப்பால் குறிப்பிடப்படும் காலத்திற்குள் அல்லது நீட்டிக்கப்பட்ட காலத்திற்குள், அந்தத் தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு அவ்வப்போது கோரும் விவர உரைகளையும், புள்ளிவிவரங்களையும், பிற செய்திகளையும் அந்தத் தகுதி வாய்ந்த அதிகார அமைப்பிற்கு அளித்தல் வேண்டும்.

**13.தகுதி வாய்ந்த அதிகாரஅமைப்பு முதலானோர் பொது ஊழியர்கள் ஆவர்.–** இந்தச் சட்டத்தினால் அல்லது இந்தச் சட்டத்தின்படி அதிகார அமைப்பு ஒன்றிற்கு அல்லது அலுவலர் ஒருவருக்கு விதிக்கப்பட்ட கடமை எதனையும் நிறைவேற்றுவதற்கு உரியவாறு அதிகாரமளிக்கப்பெற்ற, அந்த அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றும் மற்றும் அந்த அலுவலர் ஒவ்வொருவரும், இந்தியத் தண்டனைத் தொகுப்பு சட்டத்தின் (மையச் சட்டம் XLV/1860) பிரிவு 21இன் பொருளின்படி பொது ஊழியர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

**14. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.–** (1) இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு, அரசு அறிவிக்கை வாயிலாக விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட ஒவ்வொரு விதியும், பிரிவு 15இன்படி செய்யப்பட்ட ஒவ்வோர் ஆணையும், அது செய்யப்பட்டதற்கு பின்பு கூடியவிரைவில், சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடரோ அல்லது அதற்கு அடுத்து வரும் கூட்டத்தொடரோ முடிவடைவதற்கு முன்பு

அப்பேரவை அந்த விதியில் அல்லது ஆணையில் மாறுதல் எதனையும் செய்யுமானால் அல்லது அப்பேரவை அந்த விதி அல்லது ஆணை செய்யப்படக்கூடாது என்று முடிவு செய்யுமானால், அவ்விதி அல்லது ஆணை, அதற்குப் பின்னர் அவ்வாறு மாறுதல் செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நடைமுறைக்கு வராமலே போகும். எனினும் அத்தகைய மாறுதலோ, நீக்கமோ அந்த விதி அல்லது ஆணையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**15. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்**.– இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, ஆணை ஒன்றின் மூலமாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகையில், அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானவை என்றோ உகந்தவை என்றோ தனக்குத் தோன்றுகின்ற வகைமுறைகளைச் செய்யலாம்:

**வரம்புரை:** இந்தப்பிரிவின்படி ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டு காலஅளவு முடிவடைந்த பின்னர் பிறப்பிக்கப்படுதல் கூடாது.